


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் கொளத்தூர், பெரியார் அரசு மருத்துவமனை வளாகத்திற்குள் 68 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக K5 – பெரவள்ளூர் புற காவல் நிலையம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் வெற்றியழகன், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (14.11.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மீன் வள வாரியத்தின் தலைவர் டாக்டர் அ. ஜோசப் ஸ்டாலின் மற்றும் உறுப்பினர்கள் – ஏ.தாஜீதீன், என்.ஜே.போஸ், பி.அந்தோணி ஸ்டாலின், ஏ.ஜோஸ், வி.செல்வபாரதி, ஆர்.வி.கணேஷ், ஏ.பி.பன்னீர்செல்வம், எம்.முருகன், எக்ஸ்.லெனின், கோ. மனோகரன், எம்.ஜெபமாலை பர்னாந்து, ஜேசுராஜா, பிஎஸ்.ராஜா ஆகியோர் சந்தித்து, வாழ்த்துப் பெற்றனர். இச்சந்திப்பின்போது, மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் உடனிருந்தார்.

## சென்னை மாநகராட்சி சார்பில்

# தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளையும் இலவச உணவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று கலைவாணர் அரங்கில் தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, நவ. 15 - சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை இன்று (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்.**

சென்னை மாநகராட்சி சார்பில் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை வரும் 15ம் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். சென்னை மாநகராட்சியில் 10,000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் பணியாற்றி வரும் நிலையில், தூய்மைப் பணியாளர்கள் அதிகாலையே தங்கள் பணியைத் தொடங்க வேண்டிய சூழலில், பணிபுரியும் இடத்திற்கே உணவை எடுத்து வந்து சாப்பிடுவதில் பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து, சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 3 வேளை உணவு வழங்கும் திட்டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டது.

காலை, மதியம், இரவு என 3 வேளைகளிலும் இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு ரூ.186.94 கோடி ஒதுக்கிடு செய்துள்ளது. அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான தனியார் நிறுவனமானது, ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டது.

காலை உணவில் இட்லி, போன்றவை, மதியம் ரசம், சாம்பார், கூட்டு, இரவு சப்பாத்தி அல்லது ரொட்டி உள்ளிட்டவை அடங்கும். இந்த உணவுகள், ஊட்டச்சத்து நிறைந்தவையாக இருக்கும்.

இந்நிலையில் சென்னையில் தூய்மை பணியாளர்களுக்கு 3 வேளை இலவச உணவு வழங்கும் திட்டத்தை வரும் 15ந்தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்க இருப்பதாக சென்னை மேயர் பிரியா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தூய்மைப் பணியாளர்களை தனியார் வசம் ஒப்படைக்க அரசு ஆலோசனை செய்து வந்தது. இதனை எதிர்த்து தூய்மைப் பணியாளர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் போராட்டம் நடத்தினர். அதோடு தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யக்கோரியும், ஊதிய உயர்வு வழங்கக் கோரியும் கோரிக்கை விடுத்தனர்.



இப்படியான சூழலில் தற்போது தூய்மைப் பணியாளர்கள் அனைவருக்கும் தினந்தோறும் மூன்று வேளை இலவச உணவு வழங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது. முதல் கட்டமாக சென்னை மாநகராட்சியில் இந்த திட்டம் தொடங்கப்பட உள்ளது. அதனை தொடர்ந்து நகர்ப்புறம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் நலனைக் காக்கும் வகையில் தமிழக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை அமல்படுத்தி வருகிறது. அதோடு இவர்களுக்கென தனி நலவாரியமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு தினந்தோறும் மூன்று வேளையும் இலவச உணவு வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

**அரசாணை வெளியீடு!**

இதன்படி காலை, மாலை மற்றும் இரவு வேளைகளில் தூய்மைப் பணியாளர்களுக்கு தரமான இலவச உணவு வழங்கப்படும். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக சென்னை மாநகராட்சியில் பணி புரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச உணவு வழங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பாணையில், “தூய்மைப் பணியாளர்கள் குப்பையை அள்ளும்போது தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது என்பதால், அதற்கான சிகிச்சையைப் பெற தனித் திட்டம் செயல்படுத்தப்படும். இவர்கள் சுயதொழில் தொடங்க விரும்பினால் அதற்கு ரூ.3.5 லட்சம் மானியமாக வழங்கப்படும். அதோடு பணியின்போது உயிரிழக்கும் தூய்மைப் பணியாளருக்கு ரூ.10 லட்சம் நிவாரணத் தொகையாக வழங்கப்படும்.

**தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்!**

ரூ.5 லட்சம் மதிப்பிலான காப்பீட்டு திட்டம் அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் கிடைக்கும் வகையில் செயல்படுத்தப்படும். தூய்மைப் பணியாளர்கள் ஷிப்ட் முறையில் 24 மணி நேரமும் வேலை செய்வதால், அவர்களின் பசியைப் போக்க வேண்டியது தமிழக அரசின் கடமை. ஆகையால் முதற் கட்டமாக சென்னை மாநகராட்சியில் இனி 3 வேளையும் இலவச உணவு வழங்கப்படும். படிப்படியாக இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் தூய்மைப் பணியாளர்களுக்கு சென்னை மாநகராட்சி இலவச உணவு வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு நற்செய்தியை வெளியிட்டுள்ளது.

## மேற்குவங்கத்தில் – ஆதார் கார்டுதாரர்கள்

# 34 லட்சம் பேர் உயிருடன் இல்லை!

## யு.ஐ.டி.ஏ.ஐ. தகவல்!

*கொல்கத்தா, நவ.15- மேற்கு வங்க மாநிலத்தில் 34 லட்சம் ஆதார் கார்டுதாரர்கள் தற்போது உயிருடன் இல்லை என்ற விவரத்தை தேர்தல் ஆணையத்திடம் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (யு.ஐ.டி.ஏ.ஐ.) தெரிவித்துள்ளது.*

*இதுகுறித்து அந்த ஆணையம் கூறுகையில், “ஆதார் அட்டை கடந்த 2009 ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது முதல் இந்த அடையாள அட்டையை பெற்ற 34 லட்சம் பேர் தற்போது உயிருடன் இல்லை. மேலும், இம்மாநிலத்தில் 13 லட்சம் பேர் ஆதார் அட்டைகளை வைத்திருக்கவில்லை. ஆனால், அவர்கள் இறந்து விட்டனர்” என்று தெரிவித்துள்ளது.*




பல்லாவரம் தெரேசா பள்ளியில் நடைபெற்ற விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழாவில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துக்கொண்டு செங்கல்பட்டு மாவட்டத்தில் 11 ஆம் வகுப்பு பயிலும் 15 ஆயிரத்து 773 மாணவ, மாணவியருக்கு, ரூ.7 கோடியே 60 லட்சத்து 48 ஆயிரம் மதிப்பில் மிதி வண்டிகள் வழங்கும் பணியினை துவக்கி வைத்தார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.அரவிந்த்ரமேஷ், தாம்பரம் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் வே. கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, எல்.இதயவர்மன், டி.பாபு, த.ஜெயகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் 14.11.2025 நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் தலைமையில் “சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா” நடத்துவது குறித்து ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.ச.சண்முகம், கலைபண்பாட்டுத்துறை இயக்குநர் திருமதி ச.வளர்மதி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், சுற்றுலாத் துறை ஆணையர் டி.கிறிஸ்துராஜ், சென்னை மாநகராட்சி துணை ஆணையர் எம்.பிருத்திவிராஜ், இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் எஸ்.சௌமியா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.